**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.146/2023**

| Deposition of Name | முருகவேல் | Prosecution | LW-6 as PW4 |
|---|---|---|---|
| Father Name | குஞ்சு | Defence | |
| Village | கொள்ளிடம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 54/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **18.08.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து எலட்ரிசியன் வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் வருடம் நினைவில் இல்லை. நானும் விஜயகாந்த் என்வரும் முத்து என்பவருக்கு சொந்தமான வயலில் நின்றிருந்த போது ஒளி என்கிற கொள்ளிடம் காவல் நிலையத்தை சேர்ந்த காவலர் எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பங்களில் இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகசர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கையொப்பம் இட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் விசாரணை செய்த இடத்தில் சுமார் எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்றால் கூட்டம் இல்லை. பார்வை மகசரில் நான் கையொப்பம் இட்ட பேப்பர் தட்டச்சு செய்தார்களா கைகளால் எழுதி இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரர் முத்து எனது வீட்ற்கு பக்கத்துவீட்டுகாரர் என்றால் சரிதான். நானும் முத்துவும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். ஒரே போலிசார் தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார். அவர் பெயர் ஒளி என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும்தெரியாது என்றாலும் புகார்தாரர் எனது பக்கத்து வீடு என்பவர் என்பதாலும் எனது சமூகத்தை சேர்ந்தவர் என்பதாலும் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளபட்டது**

**மறுவிசாரணை இல்லை.**